# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 65/ந/2025, நாள் 03.11.2025

வே. கணபதி பாலசுப்பிரமணியன்,
மேலக்கடையநல்லூர், கடையநல்லூர். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி, தென்காசி மாவட்டம். – எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டு கீழத் தெரு, கதவு எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வே. கணபதி பாலசுப்பிரமணியன் என்பவரின் 27.07.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2024 அன்று பெறப்பட்டு, 65/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டு கீழத் தெரு கதவு எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வே. கணபதி பாலசுப்பிரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனு நாள் 27.07.2024–ல் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்:-

"தமிழக அரசு, அரசு அலுவலகங்கள் மற்றும் கட்டடங்களில் தலைவர்கள் மற்றும் பெரியோர்களின் படங்களை வைப்பது குறித்து வெளியிட்ட அரசாணையில் குடியரசு தலைவர், பிரதமர், காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, திருவள்ளுவர், காமராஜ், ராஜாஜி உட்பட முக்கிய தலைவர்கள் உருவப்படம் இடம் பெறலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் கடையநல்லூர் நகர்மன்ற கூட்ட அரங்கில் மாண்புமிகு பாரதப் பிரதமர் மோடி அவர்களின் படத்தை வைக்க கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடந்த நகர்மன்ற கூட்டத்தில் முறையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதை தொடர்ந்து கடந்த ஆகஸ்ட் மாதம் 29–ம் தேதி நகராட்சி கூட்டம் முடிந்த பின்னர் கூட்ட அரங்கில் மாண்புமிகு பிரதமர் படம் வைக்கப்பட்டது. ஆனால் எந்தக் காரணமுமின்றி எந்தவித முன் அறிவிப்புமின்றி வைத்த சில மணி நேரங்களிலேயே பிரதமரின் படம் அகற்றப்பட்டது. இச்செயல் பொது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. பொது மக்கள் சார்பில் நகராட்சி நிர்வாகம், காவல்துறை, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரிடம் முறையாக புகார் அளிக்கப்பட்டது. ஆனால் எந்த நடவடிக்கையும் இல்லை. பிரதமர் படம் வைக்கும் தீர்மானம் நிறைவேற்றி 6 மாதங்கள் ஆகிவிட்டதால், அது காலாவதி ஆகிவிட்டதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் 6 மாதத்தில் தீர்மானம் காலாவதியாகி விடும் என்பதை முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (Tamilnadu Urban Local Bodies Rules, 2023) சட்டத்தில் குறிப்பிட்டபடி நகராட்சியில்

நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை ரத்து செய்யவோ அல்லது மாற்றவோ வேண்டுமென்றால் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மூன்று மாதத்திற்குள் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடத்தி மாற்றவோ, ரத்தோ செய்யலாம். மூன்று மாதத்திற்கு பின்பு நகராட்சி நிர்வாக இயக்குநரின் முன் அனுமதி இன்றி தீர்மானத்தை மாற்றவோ, ரத்து செய்யவோ இயலாது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் கடையநல்லூர் நகராட்சி நிர்வாகம் விதிகளை மீறி அகற்றப்பட்ட பாரதப் பிரதமர் நரேந்திர மோடி படத்தை வைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது குறித்து பல முறை நகராட்சி நிர்வாகத்திடம் வலியுறுத்தியும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் கடையநல்லூர் நகர்மன்றத்தில் ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. கடையநல்லூர் 13வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திவான் மைதீன் என்பவரால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் "கடையநல்லூர் நகர்மன்றத்தில் தீர்மானம் எண்.283 நாள்.04.01.2023. மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் திருவுருவப்படத்தை நகர்மன்ற கூட்டரங்கில் வைக்க தீர்மானிக்கப்பட்டது. கடையநல்லூர் நகரின் நலன் கருதி மேற்கண்ட பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. நரேந்திர மோடி அவர்களின் திருவுருவப்படத்தை வைக்கும் தீர்மானத்தை ரத்து செய்ய கோரப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானம் அனைத்து தரப்பினரையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. திட்டமிட்டு நாட்டின் பிரதமரை அவமானப்படுத்தும் வகையிலும், களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் இது அமைந்துள்ளது. நகர்மன்றத்தில் பாரதப் பிரதமர் உருவப்படம் இடம்பெறுவதால் நகரின் நலன் எந்த வகையில் பாதிக்கப்படுகிறது என தெரியவில்லை. இது பிரதமரையே இழிவுபடுத்தும் செயலாகத்தான் கருத வேண்டி இருக்கிறது.

எனவே கடையநல்லூர் நகராட்சி நிர்வாகத்தில் விளக்கம் கேட்டு அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நகர்மன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானம் பாரளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றில் நிறைவேற்றப்படும் தீர்மானத்திற்கு இணையான சட்டப்படியான ஒரு ஆவணம் என்பதால் தாங்கள் இதில் உடனடியாக தலையிட்டு சம்பந்தப்பட்ட நகராட்சி நிர்வாகம் மீது கடும் நடவடிக்கைக்கு உத்தரவிடவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் மனு குறித்து கடையநல்லூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 12.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. கடையநல்லூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.791/2025/இ–2, நாள்.28.03.2025–ன் வழி கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்களின் திருவுருவப் படம் வைப்பதற்கு 04.01.2023 அன்று நடைபெற்ற கடையநல்லூர் நகர்மன்ற சாதாரண கூட்டத்தில் திருமதி. ரேவதி 1–வது நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் தீர்மானம் முன்மொழியப்பட்டு, திரு.சங்கரநாராயணன் 15–வது நகர்மன்ற உறுப்பினர் மற்றும் திருமதி. மகேஸ்வரி 22–வது நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் தீர்மானம் வழிமொழியப்பட்டு தீர்மானம் எண்.283 நாள்.04.01.2023–இன்படி நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், பாரதப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களின் திருவுருவப்படம் வைப்பது தொடர்பாக 04.01.2023 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.283–ஐ, இரத்து செய்ய 12.03.2024–ஆம் தேதியில் நடைபெற்ற கடையநல்லூர் நகர்மன்ற சாதாரணக்கூட்டத்தில் திரு. திவான் மைதீன், 13வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியப்பட்டு திரு. ராமகிருஷ்ணன், 26–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் வழிமொழியப்பட்டு தீர்மானம் எண்.616 நாள்.12.03.2024–ல் நிறைவேற்றப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்டவாறு நகர்மன்றக் கூட்டரங்கில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்களின் திருவுருவப் படம் வைப்பது சம்மந்தமான தீர்மானம் மற்றும் அவ்வாறு திருவுருவப்படம் வைக்க 04.01.2023–ம் தேதிய மன்றம் அனுமதித்த தீர்மானம் எண்.283–ஐ ரத்துசெய்யும் தீர்மானங்களை நகர்மன்ற உறுப்பினர்களாலேயே கொண்டுவரப்பட்டு மன்றம் அனுமதித்துள்ளது. மேற்கண்ட இரண்டு தீர்மான முன்மொழிவுகளில் இந்நகராட்சி அலுவலர்களின் பரிந்துரை மற்றும் கருத்துகள் ஏதும் பதிவு

செய்யப்படவில்லை என்பதையும், மேற்கண்ட இரண்டு தீர்மானங்களும் நகர்மன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டு மன்றம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு மற்றும் எதிர்மனுதாரரான கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:-

நகர்மன்ற தீர்மானங்கள் மீது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 42–ல் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

"**42. Resolution and orders of council.—**(1) The Commissioner shall give effect to every resolution or order of the council unless such resolution or order is modified, suspended or cancelled in whole or in part by the council or by the Director or by the Government, as the case may be.

(2) If, in the opinion of the Commissioner, any resolution or order of the council contravenes any provisions of this Act or any other Act or of any rule, notification, bye-law, regulations made or issued under this or any other Act or any order passed by the Government or if there is no provision in the budget of the council authorising the doing of any action contemplated in such resolution or order or involves expenditure in excess of the amount provided for in the budget of the council, or if there would be any miscarriage of justice in the implementation of such resolution or order relating to the municipality, he shall refer within a period of not less than seven days from the date of passing such resolution or order, the matter to the Director for orders and inform the council, of the action taken by him at its next ordinary meeting. The Commissioner shall not give effect to the resolution until the orders of the Director on such reference are received.

(3) The Director on satisfaction that such resolution or order of the council contravenes all or any of the grounds referred to in sub-section (2), may cancel the resolution or order:

Provided that no resolution or order of the council shall be cancelled by the Director unless the council concerned is given a reasonable opportunity to make any representation within the time stipulated by the Director.

(4) Where the Director is of the opinion that in respect of any resolution referred to him under sub-section (2) involves a matter of great public interest or would adversely affect any interest of the Government, he may, for reasons to be recorded in writing, refer the matter to the Government and the decision of the Government therein shall be final.

(5) Where the Collector of the District is satisfied that the execution of a resolution passed by the council other than the resolution passed by the council of any municipal corporation or order of continuance in force of such licence or permission issued by such municipalities other than municipal corporation is likely to cause danger to human beings, health or safety or is likely to lead to a riot or any affray, he may suspend such resolution, order, licence or permission, as the case may be, and report to the Director, who may thereupon, after giving the authority or person concerned a reasonable opportunity of being heard either rescind the Collector's order or direct its continuance in force with or without modifications, permanently or for such period, as he deems it."

எனவே, இப்புகார் மனு தொடர்பாக, நகராட்சி ஆணையர், கடையநல்லூர் உரிய உத்தரவு பிறப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு.வே. கணபதி பாலசுப்பிரமணியன்,
3 பவுண்டு கீழத் தெரு, மேலக்கடையநல்லூர்,
கடையநல்லூர் – 627751.

2. நகராட்சி ஆணையர்,
நகராட்சி அலுவலகம்,
கடையநல்லூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

6/11/25
செயலாளர்
6/11/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032